கூறுகளை அலசி ஆராய்ந்து அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.249, திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

249—

நாகூர் நுழைவாயிலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல்

***16281**—*திரு. ஆர். கோடிமாரி:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் தொகுதியில் நாகூர் நுழைவாயிலில் உள்ள பாலத்தைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூர் நுழைவாயிலில் இருக்கக்கூடிய இந்தப் பாலம் மிகவும் பழமையான பாலம். அந்தப் பாலம் இரண்டு வருடத்திற்கு முன் நாகையில் அடித்த புயல் சீற்றத்தால் பழுதடைந்து விட்டதால், அங்கு வாகன போக்குவரத்து மற்றும் மக்கள் போக்குவரத்து தடைபட்டது. அதனால் சுமார் 30 கிலோமீட்டர் சுற்றித்தான் நாகைக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிவாழ் மக்களின் நீண்டநாள் குறையைப் போக்க, இந்த நிதி ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கிற பாலத்தைக் கட்டுவதற்கு ஆய்வு செய்தபோது ஏறக்குறைய 3 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே பெரும் நிதிச் செலவை இந்த அரசு உடனடியாக

ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லாத காரணத்தினால் உடனடியாக அந்தப் பணியை எடுத்துச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்தேன். ஈஸ்ட் கோஸ்ட் ரோடு என்று சொல்லப்படுகிற கிழக்குக் கடற்கரைச் சாலையில் இப்போது கடலூர்வரை சாலையைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பின்னாலே இந்தச் சாலையைப் போடுகிறபொழுது இந்தப் பாலம் அந்தச் சாலையில் வருகிறது. அப்படி வருகிற காலத்திலே, இந்தப் பாலத்தைக் குறித்து அரசு பரிசீலிக்கலாம் என்று கருதுகிறது.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூருக்கு அருகிலே உள்ள எம்.ஆர்.எல்., கோத்தாரி, ஓ.என்.ஜி.சி. போன்ற தொழிற்சாலைகள் இருப்பதால் அங்குள்ள கனரக வாகனங்கள், எடை அதிகமாக உள்ள வாகனங்கள், சுமார் 20 டன் 30 டன் எடையை உடைய வாகனங்கள் அந்தப் பாலத்தின் வழியாகத்தான் ஓட்டிக்கொண்டு செல்லப்படுகிறது. அப்படிச் செல்லும்போது அந்தப் பாலம் இடிந்து விழக்கூடிய அளவில் வாய்ப்பு இருப்பதால், அந்தப் பாலத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நிதி ஆண்டில் கட்டித் தர முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல இருக்கிற நிதி ஆதாரத்தைப் பொறுத்து உடனடியாகச் செய்கிற சூழ்நிலையிலே அரசு இல்லை என்று தெரிவித்தேன். ஏனென்று சொன்னால் இந்தத் திட்டப் பணிக்காக 3 கோடி ரூபாயை உடனடியாகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகையினாலேதான் இது போன்ற சூழ்நிலையில் உடனடியாக அந்தத் திட்டத்தை எடுப்பதற்கு வாய்ப்பில்லை என்று தெரிவித்தேன். ஆகவே எதிர்காலத்தில் வர இருக்கக் கூடிய வாகனப் போக்குவரத்தைக் கருத்திலே கொண்டு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 250, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை.

வினா எண் 251, திரு.வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.